★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No· QB/8945/78

மலர்: 20 தை 16 ஸபர் 29 இதழ் 350
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-1-79

கீழுழைப்பு
பட்டதாரிகள்
சங்கம்
மேற்படி சங்கத்தில்
அங்கத்தவராகச் சேர
விபரம் அறிவதற்கு
கீழ் உள்ள முகவரியுடன்
தொடர்புகொள்ளவும்.
F. ஜோசேப்
செயலாளர்
121, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம். (1475)

### ஈரான் நிலைமை

[பாரிஸ்]

பாரிஸில் தங்கியிருக்கும் ஈரானிய மதத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னிக்கும் ஈரானியப் பிரதமர் டாக்டர் பக்தியாருக்கும் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை என்று ஆயத்துல்லா தலைமை அலுவலக உயர் அதிகாரி நேற்றிரவு இங்கு அறிவித்தார்.

பக்தியார் தமது பிரதமர் பதவியை ராஜினமா செய்தால் மட்டுமே அவரைச் சந்திக்க முடியும் என்று ஆயத்துல்லா அறிவித்திருப்பதாக இந்த உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

RECEIVED ... DIVISION ... LIBRARY

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தமிழ்ஈழ' இலட்சியம்:

# இந்திய அரசு ஏற்குமென்று நாம் எதிர்பார்க்கவில்லை!

## 'அமிரின்' சிறப்புப் பேட்டி

(கொழும்பு நிருபர் சு. மகாலிங்கசிவம்)

"எமது தமிழீழக்கோரிக்கையை இந்திய அரசு ஏற்கும் என்று நாம் எச் சந்தர்ப்பத்திலும் எதிர்பார்க்கவில்லை."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் 'ஈழநாடு'க்கு அளித்த சிறப்புப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்,

"இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜீதேசாய் இலங்கைவரும்போது நாம் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் நடத்தினால் சிலவேளைகளில் அவருக்கு எதிரானவையாக இல்லாமலும் சிலவேளைகளில் இந்தியாவுக்கு எதிரானவையாகவும்கூட ஆக்கப்பட்டுவிடமுடியும் என்று கூறிய திரு. அமிர்தலிங்கம், இவை அனைத்துக்கும் பதிலாக நான் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது பிரச்னைகளையும், நிலைமைகளையும் தெளிவுபடுத்துவேன்' என்றும் சொன்னார்.

திரு. அமிர்தலிங்கத்துடனான பேட்டிவிபரம் இங்கே தரப்படுகிறது.

**தேசாய் வருகை**

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் இலங்கை விஜயத்தின்போது நீங்கள் எப்படி நடந்துகொள்ளப் போகிறீர்கள். என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பதுதானே இந்தச்சந்தர்ப்பத்தில் முக்கியமானதாக இருக்கும்? — என்று ஆரம்பித்தேன் நான்,

"அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பிலும், பாராளுமன்ற

[6-ம் பக்கம் பார்க்க]

## தரப்படுத்தலை எதிர்த்து கண்டன ஊர்வலம்!

[யாழ்ப்பாணம்]

தரப்படுத்தலைஎதிர்த்து கண்டன ஊர்வலமொன்றை பெப்ரவரிமாத நடுப்பகுதியில் நடாத்துவதென்று நேற்று முன்தினம் கூடிய ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் தீர்மானித்துள்ளது. கூட்டத்திற்கு ஈழத்தமிழர் விடுதலை இயக்க தலைவர் திரு த. முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார்

ஊர்வலத்தில் வடபகுதியின் சகல பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சூருவளியால் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை க.பொ.த. [உயர்தர] மாணவர்களுக்கு போதனைசெய்வதற்கு இயக்கத்தின் சார்பில், ஒரு குழுபங்குனி சித்திரை மாதங்களில் மட்டுநகருக்கு சென்று இலவச வகுப்புக்களை நடத்துவதென்றும் மாவட்டரீதியான தரப்படுத்தலை ஆதரிப்பதெனவும் இனரீதியான தரப்படுத்தலை எதிர்ப்பதெனவும் தீர்மானித்தனர். [கெ]

### தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து

## கனகமனோகரன் வெளியேற்யப்பட்டார்!

[யாழ்ப்பாணம்]

தமிழ் இளைஞர் பேரவை செயற்குழு உறுப்பினரான சட்டத்தரணி கனக மனோகரன் பேரவையிலிருந்து நேற்று வெளியேற்றப்பட்டார்.

யாழ். ஸ்ரான்லிவீதியிலுள்ள தமிழ் இளைஞர் பேரவைக் காரியாலயத்தில் திரு வாசுதேவா தலைமையில் பேரவை செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த திரு. கனகமனோகரன் சமுகமளித்திருந்தார்.

திரு. கனக மனோகரன்மீது சுமத்தப்பட்டிருந்த 5 குற்றச்சாட்டுக்களையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

திரு. கனகமனோகரன்மீது சுமத்தப்பட்ட 5 குற்றச்சாட்டுகளில் திரு சந்ததியார் பற்றியும், பேரவை பொதுச்சபை பற்றியும், கூட்டணித் தலைவர்களுக்குக் கூறியதென்பது ஒரு குற்றச்சாட்டு, திரு. சந்ததியார் சர்வாதிகாரமாக நடந்துகொள்கிறார் என்று கூறியது மற்றொரு குற்றச்சாட்டாகும்.

திரு. கனக மனோகரனின் விளக்கத்தை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த செயற்குழு, அவரை மன்னிப்பு கேட்டால் தொடர்ந்து இருக்கலாமென

[6-ம் பக்கம் பார்க்க]

## தமிழரைத் தேசிய இனமாக ஏற்றாலே அரசுடன் பேச்சுவார்த்தை

### இளைஞர் பேரவை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை தனித்தேசிய இனமாக ஏற்றுக்கொண்டு நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு உண்டென்பதை ஏற்றுக்கொள்ளாத எந்த அரசாங்கத்துடனும் தமிழ் மக்களது பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஏனைய அரசியல் இயக்களுக்கும், தமிழ்இளைஞர்பேரவை கோரிககை விடுத்துள்ளது;

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானம் நேற்றுக கூடிய தமிழ்இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழுக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது, கூட்டத்துக்கு காலையில் மட்டக்களப்பு இளைஞர்பேரவைத் தலைவர் திரு. எஸ், வாசுதேவாவும், மாலையில் தமிழ்இளைஞர்பேரவை நிர்வாகச் செயலாளர் திரு க சந்ததியாரும் தலைமை தாங்கினர்,

**சுதந்திரதினம்**

"சுதந்திரதின பகிஷ்கரிப்புக் குறித்து தமிழர் விடுதலை

(6-ம் பக்கம் பார்க்க)

## கடன்சபைத் தேர்தலில் இ. த. ஆ. சங்கம் வெற்றி

### பதினேழு இடங்களையும் கைப்பற்றியது

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட கல்விவட்டாரங்களுக்கான கல்வித் திணைக்கள கடன்சபை முகாமைக் குழு உறுப்பினர் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நிறுத்தப்பட்ட பதினேழு வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

வடஇலங்கை ஆசிரியர் கூட்டணி சார்பில் போட்டியிட்ட 17 பேரும் சுயேச்சையாகப் போட்டியிட்ட 6 பேரும் தோல்வியடைந்தனர்,

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் பெயரும் அவர்கள் பெற்ற வாக்குகளும் வருமாறு:

திருவாளர்கள் தி. நடராசா 1660, சி. சிவபாலசிங்கம் 1810, ஆ. பொ. குலசிங்கம் 1649, க. நவரத்தினம் 1493, சி. மே. மாட்டின் 1613, மா. கந்தப்பு 1611, அ. பூரணசந்திரன் 1592, சி. க. கநதையா 1573 க. தர்மராசா 1566, க. புவனச்சந்திரா 1522, எஸ். அமுதலிங்கம் 1890, பொ. எட்வேட் தனராசசிங்கம் 1450, வே. க. ஏரம்பு 1829, பொ. நடராசா 1669, ப. கைலாசபிள்ளை 1721, சி. வ. ஐயாத்துரை 1688, பொ. தில்லைநாயகம் 1459.

யாழ் மாவட்டத்தில் 7600 ஆசிரியர்களில் 3268 பேர் இத் தேர்தலில் வாக்களித்திருந்தனர், இவற்றில் 84 வாக்குகள் கழிக்கப்பட்டன,

[6ம் பக்கம் பார்க்க]

## பனம்பொருள் உற்பத்தி பயிற்சிபெற கேரளம்செல்வர்

[உடுப்பிட்டி]

பனம்பொருள் உற்பத்தியில் உயர்பயிற்சி பெறுமுகமாக கரவெட்டியிலிருந்து இரு இளம் பெண்கள் கேரளம்செல்லவுள்ளனர்.

அரசாங்கத்தினால்இதற்கென இரு இளம் பெண்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்கள் கேரளத்தில் பனம் பொருள் அபிவிருத்தி, உற்பத்தி ஆகியனவற்றில் பயிற்சி பெறுவர். கரவெட்டி மேற்கு கன்பொல்லையிலிருந்தே கேரளத்திற்கு இவர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நாவற்குளியில்கண்டி வீதிக்கு அருகாமையில் 120 பரப்பு நெற்காணி புதிய கல்வீட்டுடனும் கிணற்றுடனும் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி ஆ. ஆனந்தராசா ஆலாத்தி வெளி, நாவற்குளி. 1461

ஈ வை மொறிஸ் மைனர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ஞான சுரபி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1454

### தேவை

பிரபல்யமான ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் தேவை' படிப்பு, உம்மைபற்றி உத்தரவாதமளிக்கக் கூடியவர் யார் போன்ற விபரங்களுடன் இருபாலாரும் 5-2-79 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1460 C/o ஈழநாடு லிமிட். யாழ்ப்பாணம். 1460

புகைப்படம் பிடித்தல், புளொக் தயாரித்தல், பிரேமிங் செய்தலுக்கு 18-30 வயதுக்குட்பட்ட பயிலுநர்கள் தேவை. 7ம் வகுப்பு அல்லது மேல்சித்திபெற்றவர்கள் தராதரப்பத்திரங்களுடன் பெப்பரவரி 5ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம்கொடுக்கப்படும் ஞானம்ஸ் படப்பிடிப்பாளர், 301, மணிக்கூட்டுவீதி. 81, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1473

## கேள்வி விளம்பரம்

### லொறிக்கு பொடி அடித்தல்

கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் புதிய இசுசு லொறிக்கு பொடி அடிப்பதற்கான கேள்விகள் அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் யாவும் பதிவுத்தபால் மூலம் ''தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு 9-2-79ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மற்றும் தேவையான விபரங்கட்கு சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பதில்பொதுமுகாமையாளர்
கரவெட்டி,
26-1-79. 1466

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்:

ஏழாலை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பேரம்பலம் கனகசபாபதி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

ஏழாலை, ஏழாலை மேற்கைச் சேர்ந்த கனகசபாபதி கைம்பெண் மீனும்பிகை.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 30.

எதிராக

1. பாலசிங்கம் பதிமநாபனும் பெண்.
2. பத்மினியும் — ஏழாலை மேற்கு, ஏழாலை
3. கனகசபாபதி மகள் மைதிலி-ஏழாலை மேற்கு, ஏழாலை இவர் தன்னிலையற்றவராக விருப்பதால் தனது வழக்கிற்கான பாதுகாவலனாக நியமிக்கப்படவிருக்கும் 5-ம் எதிர்வாதி மூலம்.

பராயமற்றவர்

4. கனகசபாபதி நந்தகுமரான்-ஏழாலைமேற்கு. ஏழாலை இவர் பராயமற்றவராக விருப்பதால் தனது வழக்கிற்கான பாதுகாவலனாக நியமிக்கப்படவிருக்கும் 5ம் எதிர்வாதிமூலம்.
5. பேரம்பலம் பதிமநாதன் ஏழாலைமேற்கு, ஏழாலை.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க அதில் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி.

றி. ஜெயராசசிங்கம்
பதிவாளர்

1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 7 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது.

செ. இராமலிங்கம்.
மனுதாரின் சட்டத்தரணி
1455

## மகா கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் அடுத்தமாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கிறது. [கை-உ]



## ஓய்வு பெற்றார்

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பிரதிப்பதிவாளர் திரு. வ. ந மாணிக்கவாசகர் அரசாங்க சேவையில் இருந்து, 35வருடங்களுக்குமேல் கடமையாற்றிய பின் இம்மாதம் 23ம் திகதியிலிருந்துஓய்வுபெற்றுள்ளார்.

இவர் முன்பு சுகாதார அமைச்சின் கீழுள்ள யானைக்கால் நோய்த்தடைப்பகுதியில் செயலாளராகவும், மலேரியா நோய்த்தடைப் பகுதியில் உதவிநிர்வாக உத்தியோகத்தராகவும் கொழும்பு வைத்தியசாலையின் தொகுப்பில்மேலதிகசெயலாளராகவும் கடமை புரிந்துள்ளார். அதன் பின் கல்வி அமைச்சின்கீழுள்ள பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரியிலும், யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியிலும் பதிவாளராகக் கடமையாற்றினார்.

## சன்மார்க்க சபை வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் சுவாமி சாந்தானந்தஜிக்கு இன்று திங்கட்கிழமை மாலை குரும்பசிட்டி சன்மார்க்க சபை வரவேற்பு அளிக்கவிருக்கிறது. இவ்வைபவத்தில் சுவாமிஜியின் பஜனையும் இடம்பெறும். [அ]

## இராணுவ வீரர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சடந்த ஞாயிறன்று மயிலிட்டி மீன்பிடித்துறையில் மீனவர்களும் பொதுமக்களும் தாக்கப்பட்டு மீன்களை அள்ளிச்சென்ற சம்பவம் தொடர்பாக 4 இராணுவ வீரர்கள் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத்தெரிகிறது [இ]

## உரும்பராய் இந்துக்கல்லூரி இரவுவிருந்து

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த இராப்போசனவிருந்து எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது

மன்றத்தலைவர் திரு. கே. ஆர் எஸ் சிவகுமாரனும், கல்லூரி அதிபர் திரு. ஈ சிவானந்தனும் இதற்கான ஒழுங்கினை மேற்கொண்டுள்ளனர். [உ]

## நீதிமன்ற விற்பனை

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம்: 11722

1. சோமசுந்தரம் சுந்தரலிங்கம்
2. சோமசுந்தரம் மகள் வத்சலா
3. சோமசுந்தரம் மகள் கௌசல்யா
4. சோமசுந்தரம் கைம்பெண் தங்கம்மா

வழ. நண்பர்.
19, ஐயனார்கோவில் றோட், வண்ணார்பண்ணை மேற்கு. யாழ்ப்பாணம்.
வழக்காளிகள்

1. சுப்பிரமணியம் வரதராசா
2. பெண் யோகாம்பிகை தும்பளை
3. கார்த்திகேசு வீரகத்தி
4. சின்னவர் மறுநாமம் சின்னர் கணபதிப்பிள்ளை செம்பியன்பற்று
5. சந்திரசேகரம் ஆழ்வாப்பிள்ளை
6. நாகலிங்கம் மகள் வாவாத்தைப்பிள்ளை தும்பளை பருத்தித்துறை

எதிராளிகள்

இதன் கீழ் காணப்படும் மேற்படி எதிராளிகளின் ஆதனத்தை 1979ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி முற்பகல் 11-30 மணிக்கு அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

யாழ்ப்பாணம் இல. 19, ஐயனார் கோவில்றோட், வண்ணார்பண்ணை மேற்கில் வசிக்கும் மேற்படி வழக்காளிகட்கு வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தீர்வைத்தொகை விசேட நட்டம் ரூபா 9000/-மும் பிஸ்கால் செலவும் மேற்படி எதிராளிகளின் பட்சத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 11722 1976ம் ஆண்டு புரட்டாசி மாதம் 17ந் திகதி தீர்ந்த தீர்வையின் பிரகாரம் எதிராளிகளிடம் இருந்து பெறவேண்டியதாகும்.

#### ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி செம்பியன்பற்று இறை நாவிதன் வயல் நெ. பரப்பு 36 குழி 3 3/32 எல்லை கிழக்கு சுப்பிரமணியம் வரதராசா பெண் யோகாம்பிகைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். வடக்கு தம்பிராசா அப்புக்குட்டிக்கும் முருகேசு வடிவேலுவுக்கும் நல்லதம்பி முத்துக்குமாரசாமிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு தம்பிராசா அப்புக்குட்டிக்கும் கார்த்திகேசு ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும் 1971ம் ஆண்டு தை மாத 9ந் திகதி நில அளவையாளர் திரு. எஸ் சுப்பிரமணியம் அவர்களால் 1461ம் இலக்கப் படத்தில் விந்தாரிக்கப்பட்டதும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பிரிவிடல் வழக்கு 9626ம் இலக்சத்தில் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி 8 துண்டுகளாகப் பிரிவிடப்பட்டுள்ளது இதில் 3ம், 4ம், 7ம் துண்டுகள் தவிர்ந்த மற்றத் துண்டுகள் யாவும்.

கா. கணபதிப்பிள்ளை
பிஸ்கால் யாழ் வலைய
1457 மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல; MB/131

1. நவரட்ணம் நவானந்தராஜாவும்; பெண்.
2. தங்கராணியும்,
   இல: 9, சென். அல்பேன் பிளேஸ், பம்பலப்பிட்டி.

வழக்காளிகள்

எதிராக

1. சோமசுந்தரம் கந்தையாவும்; பெண்.
2. தேவமணி இல. 30/2 நிக்கல்ஸ் ஒழுங்கை, கண்டிக்குளி.
3. சின்னத்துரை சந்திரசேகரம், அரியாலை மேற்கு அரியாலை.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் MB/131-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைந்த கோட்டுக் கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1979ம் ஆண்டு மாசிமாதம் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை (27-2-79, காலை 10-30 மணிக்கு ஏலவிற்பனையை நடாத்த நியமித்துள்ளேன்.

#### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 6,000/-வும் மேலும் 3000/- வருட மொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு ஆனி மாதம் 1ம திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1977ம் ஆண்டு ஆவணி மாதம் 4ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஐந்து வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 558/85 சதம் கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை: ''புளியடிவளவு'' நில. பர 3 குளி 4 செய்பயிர், வான்பயிர்கள் வீடும் கிணறும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு இராசா பெண் அன்னம்மாவினதும் மறுபேரினதும் ஆதனம் மேற்கு முத்துத்தம்பி சபாரட்ணத்தின் ஆதனம் தெற்கு பரமசாமி பெண் தேசம்மாவின் ஆதனம் இதடங்கலும். (முற்பதிவு டி 339/224)

சி. செ. பாலசிங்கம்,
(கொமிஷனரும் மதிப்டாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
20-1-79 1441

## நன்றி நவிலல்

17-1-79 அன்று சிவபதமடைந்த இலங்கை வானொலி முன்னாள் பேச்சு, சமய நிகழ்ச்சி அமைப்பாளர் திரு. அருள் தியாகராசா அவர்களது மரணச் சடங்குகளின்போது சமுகமளித்தவர்க்கும் உதவிகள் நல்கியவர்க்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்க்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அ. தெட்சணாமூர்த்தி (சகோதரர்)
சகோதரிகள்
குடும்பத்தினர்
வட்டுக்கோட்டை.

கமலாதேவி தியாகராசா (மனைவி)
மைத்துனன் மைத்துனி
குடும்பத்தினர்
உடுவில் கிழக்கு.

1472


## A/L BOTANY

1979, ஏப்ரலுக்குரிய 30 மணித்தியால விசேட வினா விடை துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 29-1-79 திங்கட்கிழமை 4 மணி
விசேட பட்டதாரிகளால் (ANTON GROUP) நடாத்தப்படும்
இந்த வகுப்பில் நீங்கள் சேர்ந்து படித்தால் சித்தியடைவது நிச்சயம்.
விபரங்களுக்கு:
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
22, ராமையா செட்டியார் லேன்,
(சாந்தித் தியேட்டருக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம். 1476



## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# மக்கள் சம்மதமின்றி அரசின்மாற்றுத் திட்டம் எதையும் நாம் ஏற்கமாட்டோம்

## தமிழர் பிரச்னையில் ராஜ்மோகன் முயற்சி பற்றி அமிர்

**அரசாங்கம் மாற்றுத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தால் அது பற்றி ஆலோசிக்கலாம் என்றும் மக்களின் சம்மதத்தைப் பெருமல் அத்தகைய திட்டமெதையும் ஏற்றுக்கொள்ளமுடியாதென்றும்திரு. ராஜ்மோகன் காந்தியிடம் தெரிவித்தேன் என்று எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் "ஈழநாடு"க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மோகன்தாரியா சொன்னது

"அண்மையில் இங்கு வந்திருந்த இந்திய வர்த்தக அமைச்சர் திரு. மோகன் தாரியா, உங்களின் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு இந்தியா ஆதரவளிக்காது என்று கூறியிருந்தாரே...?" என்று வினவினேன்.

அமிர்: மோகன் தாரியா இந்தியா அல்ல. அது மாத்திரமல்ல, எமதுகோரிக்கையை இந்திய அரசு ஏற்குமென்றும் நாம் எச்சந்தர்ப்பத்திலும் எதிர்பார்க்கவுமில்லை. ஆனால் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தமிழ் ஈழ விடுதலை மீது கொண்டுள்ள அக்கறையை மோகன்தாரியாவோ அல்லது வேறு எவருமோ தடுத்துவிடமுடியாது. வங்கத்

### ஆகஸ்ட் கலவரம்

"ஆகஸ்ட் கலவரத்தின் போது ஐந்து லட்சம் மக்கள் தமிழகத்தில் ஊர்வலம் நடத்தினர்கள். ஈழத் தமிழர்களின் இன்னலைத் துடைக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தித் தமிழ் நாடு சட்டமன்றம் ஏகோபித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. இவற்றையெல்லாம் மோகன்தாரியாவும், மற்றையவர்களும் தடுத்துவிடமுடியுமா?

-- மாலி --

"மேற்கு வங்காளத்தில் எழுந்த குமுறல் பங்களாதேஷின் விடுதலைமீது எப்படி இந்தியாவை அனுதாபம் காட்டச்செய்ததோ, அதேவிதத்தில் தமிழ்நாட்டு மக்களின் இரத்த பாசத்துக்கும் எந்தச் சக்தியும் அணைபோட்டுவிட முடியாது" என்று விரிவாகப் பதிலிறுத்தார்.

"நீங்கள் எப்போது இந்தியா செல்லவிருக்கிறீர்கள்?" என்று கேட்கிறேன்.

"அதை நான் இப்போது கூறுவது அவ்வளவு நல்லதல்ல" இது அமிர் அளித்த பதில்.

### பல்கலைக்கழக அனுமதி

நான்: "குடியேற்றமும், பல்கலைக்கழக அனுமதி தொடர்பான மொழிவாரித் தரப்படுத்தலும் முக்கியமான இரு பிரச்னைகள். இவை இரண்டுமே, முந்திய அரசாங்கத்தைவிடப் பெருமளவில் இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதாகவும்ஆனால் அப்படியிருந்தும் கடந்த அரசாங்கத்துடனும், தற்போதைய அரசாங்கத்துடனுமான உங்கள் 'உறவுகள்' முந்திய அரசாங்கத்துடனானதைவிட இப்போது சற்று 'ஐக்கியமாக' இருப்பதாகவும் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறைவாகவும், தீவிரமற்றும் இருப்பதாகவும் பொதுவாகக் கூறப்படுகிறதே?

அமிர்: "இனவாரித் தரப்படுத்தலை இந்த ஆண்டுதான் அரசு செய்ய முயல்கிறது. அதனை நாம் கண்டித்து மீளாய்வுசெய்யக் கோரியிருக்கிறோம்.

"குடியேற்றத்தைப் பொறுத்தவரையில், பேச்சுகள்தான் நிகழ்கின்றனவேதவிர செயலில் இன்னமும் அரசு ஈடுபடவில்லை."

அப்படி ஈடுபட்டால் அப்போது அவற்றைப் பார்ப்போம்"!

"இதைத்தவிர, முந்திய அரசுடன் விரோதமாகவும் இப்போது ஐக்கியமாகவும் இருக்கிறோம் என்பதில் அர்த்தமில்லை".

### மதிக்கவில்லை

"முந்திய அரசு எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களையே மதிக்கவில்லை. தங்கள் கட்சி அமைப்பாளர்கள் என்று சிலரை நியமித்து, அவர்களின் சிபார்சிலேயே அனைத்தையும்மேற்கொண்டது. இந்த அரசாங்கத்திலும் அத்தகைய நிலைமைகள் இருந்தாலும் முன்னிருந்த அளவுக்கு இல்லை. ஆனாலும், எம்மைப் பொறுத்தவரையில் எமது நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. அபிவிருத்திப் பணிகளில் முன்னரும் ஒத்துழைத்தோம், இப்போதும் ஒத்துழைக்கிறோம்.".

### தீவிரம் இல்லையா?

நான்: "உங்கள் கோரிக்கை மீதான நடவடிக்கைகள் தீவிரமாக இல்லை என்று கூறப்படுகிறது. பொதுவாக, இளைஞர்கள் மத்தியில் சில கருத்து துவேறுபாடுகள் எழவும் இதுவேதான் காரணம் என்றும் நம்பப்படுகிறதே?"

அவர்: "தேர்தல் முடிவடைந்ததும் இனக்கலவரம் மூண்டது. அதையடுத்து புதிய அரசியலமைப்புவந்தது. அதன் பின்னர் சூருவளி அநர்த்தம் விளைத்தது"

"இவை எம்முடைய நடவடிக்கைகளைத் தீவிரமாக செயல்படுத்த முடியாதபடி ஆக்கிவிட்டன. இயக்கத்தைக் கட்டுக்கோப்புடன், எதிர்ப்பு இயக்கங்களில் தீவிரமாக ஈடுபடுத்தும் விதத்தில் தயார்படுத்தியே வருகிறோம்.

"இதுதவிர; சில உரிமைகளுக்காக நடத்தும் போராட்டம் வேறு, ஒரு நாட்டை மீட்டெடுக்க நடத்தும்

[5ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

## அவப்பெயர் ஏற்படாமல் அரசு தவிர்க்க வேண்டும்

மாவின் விலை சிறிது உயரலாம் என்று கடந்த வாரம் ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளிவந்திருந்த செய்தியைப்படித்தேன். சூருவளியினல் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான ஒரு பகுதிப் பணத்தை மாவின் விலையை அதிகரிப்பதன்மூலம் ஈடுசெய்ய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக அதில் வெளிவந்திருந்தது. இதை வாசித்தபொழுது மிகவும் வருத்தமாகஇருந்தது. ஏற்கனவே வெளிநாடுகளிலிருந்து கிடைத்தபொருளுதவிகள் ஏராளம், அதைவிட நம் நாட்டிலேயே ஏராளமானநிதி பணமாகவும் பொருட்களாகவும் சேர்ந்திருக்கின்றன. இவையனைத்தும் சூருவளியினல் பாதிக்கப்பட்ட இடங்களுக்குப் பூரணமாகக் கிடைக்கவில்லை என்ற செய்திகள் எத்தனையோ புதினப்பத்திரிகைகளில்வெளிவந்திருந்தன ஆகவே அரசாங்கம் இப்படியான ஒரு சூழ்நிலையை ஆராயாமல் சூருவளியினல் பாதிக்கப்பட்ட இடங்களைப் புனரமைப்பதற்கு மாவின்விலையை அதிகரிப்பதினல் ஒரு பகுதிப்பணத்தை ஈடுசெய்யநினைப்பது தவருனதாகும்.

ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினல் பாதிக்கப்பட்டிருக்கும் எத்தனையோ மக்களுக்கு இது ஒரு பெரும் பளுவாக அமையும். ஏற்கனவே சூருவளி நிவாரணத்தை முன்னிட்டு சிகரட்டின் விலையையும் சாராயத்தின் விலையையும் அதிகரித்துள்ள அரசாங்கத்தின் கொள்கை மக்களால் வரவேற்கக்கூடிய தொன்ருகும். ஆனல் அத்தியாவசியப் பொருளாகிய மாவின் விலையை அதிகரிக்க நினைப்பது அரசாங்கம் 'சூருவளி' யென்ற போர்வையை வைத்து விலை உயர்வு நாடகத்தை நடத்துகின்றது என்ற ஒருதப்பபிப்பிராயத்தை பொதுமக்களிடையே தோற்றுவிக்கும். ஆகவே இந்த எண்ணத்தை அரசாங்கம் முற்ருகக் கைவிடவேண்டும்.

"வண்ணைவாசி"
யாழ்ப்பாணம்.

°° °° °°

### பணி தொடரட்டும்

ஈழத்தின் தமிழ் நாளிதழ்களில் விளையாட்டுச் செய்திகளை குறிப்பாக 'கிரிக்கட்' செய்திகளை உடனுக்குடன் வாசகர்களுக்குத் தந்து மகிழ்விப்பதில் 'ஈழநாடு' முன்னணி வகிக்கின்றது. வெளிநாடுகளில் நிகழும் கிரிக்கட் டெஸ்ட் தொடரின் செய்தியும் அப்பந்தயங்களில் நிகழும் சாதனைகளையும் குறிப்பிட்டு கிரிக்கட் ரசிகர்களுக்கு வரப்பிரசாத செய்திகளை வெளியிட்டுவரும் ஈழநாட்டிற்கு நன்றி. தொடர்ந்தும் இப்பணியை மேற்கொள்ளவேண்டும் என்று விளையாட்டு ரசிகர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

சி. சத்தியமூர்த்தி
இணுவில்.

# ஊரெழுவில் அருளாட்சி செய்யும் அன்னை மீனுட்சி

[தா. மகாதேவக்குருக்கள்]

*[சுன்னுகம் ஊரெழுப் பதியில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை நடைபெறஇருக்கும் அருள் மிகு மீனுட்சியம்மையின் புனருத்தாரண கும்பாபிஷேக விழாவையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.]*

சக்தியின் பெருமைதனை "பாவனேபநிஷத்" "திரிபுரோபநிஷத்" "பஹ்ருவ்சோபநிஷத்" முதலிய உபநிடதங்களும் ஸ்ரீசூக்தம், துர்க்கா சூக்தம், தேவி சூக்தம் முதலிய சூக்தங்களும் விரித்துக் கூறுகின்றன. தேவியின் அம்சமான காயத்ரிதேவியைச் சூரிய மண்டலத்திலும், அன்னை பராசக்தியைச் சந்திர மண்டலத்திலும் நிறுத்தி தியானித்து வரும் மரபு பண்டைக் காலத்தில் கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றது. அன்னை பிராண சக்தியாகவும் இந்திரிய சக்தியாகவும் அங்கங்களின் வலிமையாகவும் ஞான ஒளியாகவும் போற்றி வணங்கப்பட்டு வந்திருக்கிருள்

சக்தி பூஜைகளையும், சக்தி வழிபாட்டினையும், சக்தியின் பெருமைகளையும் பல புராணங்கள் எடுத்தியம்புகின்றன. விஷ்ணு சக்தியாகிய ருக்மணி தேவி தனது விவாகத்திற்கு முன் அம்பிகையை வழிபட்டதை ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. தேவீ பாகவதத்தில் அன்னையினுடைய சகல திருவிளையாடல்களும் வர்ணிக்கப்பட்டுள்ளது. சக்தி வழிபாட்டில் முக்கிய அம்சம் வகிக்கும் "லலிதாஸஹஸ்ரநாமம் லலிதா திரிசதீ" முதலியவை பிரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. மார்க்கண்டேய புராணத்தில் எழுநூறு சுலோகங்களில் அம்பிகையின் பெருமைகள் விவரிக்கப்பட்டுள்ளது.

இத்துணை பெருமை வாய்ந்த அம்பிகை தமிழ்நாட்டிலே பல திருத்தலங்களிலே பல நாமங்கள் தாங்கி வீற்றிருந்து அருள்பாலித்து வருகிருர். கன்னியா குமரியில் பாலதிரிபுரசுந்தரி என்று போற்றப்படும் அன்னை மதுரையில் மீனுட்சி யென்று வழிபடப் படுகிருள். காஞ்சியில் காமாட்சியென்றும், காசியில் விசாலாட்சியென்றும், சமயபுரத்தில் மஹாமாரியென்றும் அவளே போற்றப்படுகிருள். ஈழவளநாட்டிலும் இவ்வாறே பல திருத்தலங்களிலும் புகழோடு வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகிருர். நயினுதிவு, சிரணி முதலிய இடங்களில் நாகபூஷணியம்மையாகவும் மாதிதை புளியங்கூடல் பெருங்குளம் அல்வாய் முதலிய இடங்களில் மாரியம்மனுகவும், தெல்லிப்பழையில் ஸ்ரீ துர்க்கா தேவியாகவும் முனீஸ்வரத்தில் ஸ்ரீவடிவாம்பிகையாகவும் உடுவில், ஊரெழு முதலிய இடங்களில் ஸ்ரீமீனுட்சியம்மையாகவும் நாமம் தாங்கி அடியார்களுக்கருள் புரிந்து வருகிருர்.

சக்தி வழிபாட்டில் முக்கியமான மந்திரம் "பஞ்சதசாட்சரீ" முக்கியமான யந்திரம் 'ஸ்ரீ சக்கரம்' ஸ்ரீசக்கரமத்யஸ்தாயை நம" ஸ்ரீ சக்கரத்தின் மத்தியில் வீற்றிருப்பவளே உனக்கு வணக்கம் என்று லலிதா சஹஸ்ரநாமம் கூறுகின்றது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் தன்னுடைய சரீரத்தையே ஸ்ரீசக்கரமாகக் கருதினுர். நான் வந்திரம். நீ யந்திரி என்று அடிக்கடி அவர் அம்பிகையிடம் கூறுவார். ஸ்ரீநகரம் என்று வர்ணிக்கப்படும் ஸ்ரீசக்கரமானது சதுரங்கள், வட்டங்கள் பத்மங்கள், கோணங்கள் முதலியன ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கிவைக்கப்பட்டு நடுவில் வட்டவடிவமான பிந்துஸ்தானத்தோடு திகழ்வதாகும்.

இத்துணைப் பெருமை வாய்ந்த ஸ்ரீசக்கரத்தை நடுவே திகையாகக் கொண்டு ஒன்பது குண்டங்களுடன் அழகான யாகசாலை ஊரெழு கண்ணகையம்மன் என்று வழங்கும் ஸ்ரீ மீனுட்சியம்மையின் மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ளது. அவிசொரிந்து வேட்கும் கிரியைகள் 30-1-79 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

திரிதளம் என்று வர்ணிக்கப்படும் மூன்று அடுக்குகள் கொண்ட விமானம் ஆலயத்தை அழகுறச்செய்கிறது. சிற்பசாஸ்திரத்திற்கமைய அம்பிகையின் பல அவதார தோற்றங்கள், பதுமைகளாக அமைக்கப்பட்டு விமானம் பொலிவுறத் திகழ்கின்றது. மண்டபங்களெல்லாம்வர்ணம் பூசப்பெற்று புதுமெருகுடன் பிரகாசிக்கின்றன. விநாயகர், சுப்பிரம்மண்யர், சனீஸ்வரன் முதலிய மூர்த்திகட்கு பரிவார ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாலயங்களில் உள்ள விக்கிரகங்களில் மந்திரசக்திமூலம் உருவேற்றப்பட்டு 1-2-79 வியாழன் காலை மஹா கும்பாபிஷேகம் கோலாஹலமாக நடைபெற இருக்கிறது.

திருவருளும் திவ்ய சௌந்தர்ய தோற்றமும் கொண்ட ஸ்வாமி சாந்தானந் ாஜி தர் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கிருர். அவரின் பஜனை ஒலி, அந்தணர்களின் மந்திர ஒலி ஓதுவார்களின் பண்ணிசை ஒலி, நாதஸ்வர ஒலிகளோடு கலந்து, இம்மூன்று நாட்களும் இவ்வாலயத்தைச் சுற்றிக் காணுமிருதமாக ஒலிக்கும். அடியார்கள் எல்லோரும் சுவாமி சாந்தானந்தாஜியின் கருணைமிகு திருவதனத்தைத் தரிசிப்பதோடு, அவர் பஜனையையும் கேட்டு, அருள் மிகு மீனுட்சியம்மையின் மஹா கும்பாபிஷேகத்தையும் கண்டு இம்மை, மறுமைப் பேற்றையடைந்து உய்வார்களாக.

### பாண்டிச்சேரி விவகாரம்

# "இணைப்புப்பற்றிமுடிவில்லை பின் கலவரம் எதற்காக?"

## பிரதமர் தெரிவித்ததாக தகவல்

பாண்டிச்சேரி, ஜன. 28

"பாண்டிச்சேரியை அண்டை மாநிலங்களுடன் இணைப்பது என்று மத்திய அரசு முடிவு செய்துவிடவில்லை. எனவே அங்கு ஆர்ப்பாட்டங்கள் தேவையற்றது".

இவ்வாறு பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளதாக அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. பாலா மணலு தகவல் வெளியிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பாண்டிச்சேரியில் நிலவும் பதட்டத்தைச் சமாளிக்க இராணுவம் அழைக்கப்பட மாட்டாதென்றும் சிவில் அதிகாரிகளின் உதவியுடனேயே நிலைமைகள்சமாளிக்கப்படுமென்று பாண்டிச்சேரி நிர்வாகம் அறிவித்துள்ளது

நேற்றும் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### துப்பாக்கிச்சூடு

கடந்த 25ம் திகதி ஊரடங்குச் சட்டத்தை மீறிய மாணவர் ஒருவர் பொலிசாரால் சுடப்பட்டு மாண்டார். மூவர் படுகாயமுற்றனர்கள்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது பொலிசாருக்கும்காடைகள் உண்டாகினஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

### அமைதி நிலவுகிறது

சில அசம்பாவித சம்பவங்களைத் தவிர தற்போது நிலைமை பூரண அமைதிக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். [உ]

### மத்திய அரசு நடவடிக்கை:

# தமிழக எதிர்க்கட்சிகள் கண்டனத் தீர்மானம்

சென்னை, ஜன, 28

"மத்திய அரசு பிறப்பித்துள்ள ஊரடங்குச்சட்டத்தையும் சட்டத்தை மீறுபவர் யாராயிருந்தாலும், கண்ட இடத்தில் சுடப்படவேண்டுமென்ற அவசர உத்தரவையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்".

இவ்வாறு பாண்டிச்சேரிவிவகாரம் குறித்து சென்னையில் கூடிய தமிழக சட்டசபை எதிர்க்கட்சிகள் ஏகமனதாக நிறைவேற்றியதீர்மானம் ஒன்றில் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் தமிழ்நாடு தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம், திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் மு. கருணாநிதி, செயலாளர் திரு. அன்பழகன், திண்டிவனம் ராமமூர்த்தி, முஸ்லிம் லீக் தமிழ்நாடு செயலாளர் ஜனாப் அப்துல்சமது உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### முடிவைக் கைவிடுக

நிறைவேற்றப்பட்ட மற்றைய தீர்மானங்கள்வருமாறு:

பாண்டிச்சேரியை அண்டை மாநிலத்துடன் இணைப்பதை மத்திய அரசு கைவிட்டு உடன் தேர்தலை நடாத்தவேண்டும்.

பொலிஸ்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்குறித்து உடனடியாக நீதிவிசாரணை நடாத்தவேண்டும்

கைது செய்யப்பட்ட அனைவரையும் உடன் விடுதலை செய்யவேண்டும். (கெ-உ)

### "கள்ளச்சாராயத் தொழிலை

# கைவிட்டால் அரசு புதுவாழ்வு அளிக்கும்"

### — தமிழக ஆளுநர்

சென்னை, ஜன. 28

"கள்ளச் சாராயம் தயாரித்து ஜீவனம் நடத்துவோருக்கு மறுவாழ்வு அளிக்கஅரசு தயாராக இருக்கிறது".

இவ்வாறு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"அரசின் இந்த உறுதிமொழியை ஏற்றுகள்ளச்சராயத் தயாரிப்பாளர்கள் தமது தொழிலைக் கைவிட்டு புதுவாழ்வை உருவாக்கிக்கொள்ள வேண்டும்" என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். (உ)

# ஊரடங்குஉத்தரவு வாபஸ் பெறப்பட்டது

பாண்டிச்சேரி, ஜன. 28

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமைமுதல்பிறப்பிக்கப்பட்டிருந்த44 மணித்தியாலஊரடங்குச்சட்டம் விலக்கிக்கொள்ளப் பட்டுள்ளது.

இன்றுகாலை6மணியிலிருந்து இவ்வூரடங்குச்சட்ட உத்தரவு வாபஸ் பெறப் பட்டதென்று பாண்டிச்சேரி நிர்வாகம் அறிவித்தது. ஆயினும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துவதற்கான தடையுத்தரவு தொடர்ந்து அமுலிலிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஈரானியப் பிரதமர்

# பாரிஸ் சென்று சமயத்தலைவரை சந்திப்பார்

தெஹ்ரான் ஜன 28

ஈரானிய பிரதமர் டாக்டர் பக்தியார் தற்போது பாரிஸில் தங்கியுள்ள ஈரானியமதத்தலைவர் கொமேனியுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்

ஈரானிய விமானநிலையங்கள்பதட்டநிலைமையையடுத்து மூடப்பட்டபோதிலும்கொமேனியின் ஈரானிய வருகையைத் தடுப்பது த நோக்கமல்ல என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்

48 மணித்தியாலங்களுக்குள் பிரதமர் பாரிஸ் செல்வார் என்று தெஹ்ரான் அறிக்கைகள் இன்று காலை தெரிவித்தன.

### பிரதமர் வானொலி உரை

நேற்று வானொலியில் உரை நிகழ்த்தியபிரதமர் "எனக்கும் நாட்டுப்பற்றுஇல்லாமலில்லை. ஈரானிய நிலை குறித்து கொமேனியின் கருத்தும் அவசியம் என்பதை நான் உணர்வேன்" என்று கூறினார்.

### பிரதமரின் உள்நோக்கம் புரியும்

பிரதமரின் உள்நோக்கம் என்னவென்பதுஇச்சந்திப்பின் போது புரிந்து விடுமென்று கொமேனியின் நெருங்கிய சகா ஒருவர் கருத்து வெளியிட்டார். [உ]

# 'தமிழருக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை'

## சங்கரப்பிள்ளை அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"சுதந்திரதின வைபவங்களை எதிர்ப்பதை முற்றுமுழுதாக நான் ஆதரிக்கிறேன்: தமிழ் மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. அவர்கள் இன்றும் ஆளப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்."

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. தா. சங்கரப்பிள்ளை சுதந்திரதினம் தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"தமிழ்மக்கள் ஆளப்படுவது மட்டுமன்றி, அவர்களுக்கு உரிய அந்தஸ்துகளும் மறுக்கப்பட்டுள்ளன.

"சகலவிதமான தரப்படுத்தலையும் எதிர்க்கின்றோம். பின்தங்கிய பகுதிகள் என்ற ரீதியில் கொடுக்கப்படும் சலுகை தவறானது. கல்வியில் ஒருவர் பின்தங்கியிருந்தால், அவர் கல்வித் திறமையைப் பெற்றபின்னரே முன்னேறலாம்.

"உத்தியோகம் வழங்கும் முறையில் மாத்திரம் பின்தங்கிய பகுதிகளுக்குச் சலுகை கொடுக்கலாமேயன்றி, உயர் கல்வியில் பின்தங்கிய பகுதிகளுக்கு எப்படிச் சலுகை கொடுக்கமுடியும். கல்வியின் முன்னேற்றத்திற்கு இது நேர் மாறானது.

"நூற்றுக்குநூறு திறமை அடிப்படையில் மாத்திரமே உயர் கல்விக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

'பின்தங்கிய இடங்களிலிருந்து கல்வி முன்னேற்றம் பெறக்கூடியவர்கள் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்பட முன்னர், இவர்களுக்குப் புறம்பாக ஒரு வருடப் படிப்புக்கு ஏற்பாடுகள் செய்துகொடுக்க வேண்டும். திறமை அடிப்படையில் மற்றைய மாணவர்களுடன் போட்டியிடக்கூடிய அறிவை, இந்த ஒரு வருட காலத்தில் இம்மாணவர்கள் பெற்றுக்கொண்டதன் பின்னர்தான் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படவேண்டும்" [க[

# வேலையிலிருந்து திரும்பிய இளம் பெண்ணுக்கு கத்திக்குத்து!

## கணவனே குத்தினராம்

[உரும்பராய்]

வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய இளம் பெண் ஒருவரை அவரது கணவர் வீட்டு வாசலில்வைத்து கத்தியால் குத்தினராம்

உரும்பராய் தெற்கில் இச் சம்பவம் நிகழ்ந்தது.

பலத்த கத்திக் குத்துக் காயங்களுடன் 31 வயதான தர்மலிங்கம் தவரூபி என்ற அந்த இளம்பெண் ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது வலதுமார்பில்2காயங்களும், கையில் ஒரு காயமும் உண்டு நான்கு வருடங்களுக்கு முன் திருமணம் செய்த இவர்கள் தற்போது ஒரு வருடமாகப் பிரிந்து வாழ்வதாகவும், நேற்று முன்தினம் காலை மனைவி இருந்த வீட்டிற்கு வந்த கணவர் மனைவியுடன் பணம் கேட்டு ஏசியதாகவும் மாலை கத்திக்குத்துச் சம்பவம் நடைபெற்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மனைவி யாழ். நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார்.

காயமடைந்த இளம் பெண் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்திலேயே இவ்விபரங்கள் தெரியவந்துள்ளது. [இ[

# ரொக்பெல்லர் காலமானர்

வாஷிங்டன், ஜன. 28

உலக செல்வந்தர்களில் ஒருவரும் முன்னாள் அமெரிக்கஉபஜனாதிபதியுமான திரு. நெல்சன் ரொக்பெல்லர் தமது 70 வயதில் காலமானர்.

4 தடவைகள் நியூயோர்க் நகரின் கவர்னராகப் பதவி வகித்த திரு. ரொக்பெல்லர், 74 டிசம்பரில் உபஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். [இ[

# பாண்டிச்சேரி முன்னாள் முதல்வர், அமைச்சர் கைது!

புதுச்சேரி, ஜன. 28

பாண்டிச்சேரி முன்னாள் முதல்வர் ஜனாப் பாரூக்மரைக்காயர், முன்னாள் உள்துறை அமைச்சர்திரு பி ரி. இராமச்சந்திரன் உட்பட 20 பேர் புதுச்சேரியில் கைது செய்யப்பட்டனர்.

ஊரடங்கு உத்தரவை மீறியதாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்

நேற்று நடைபெற்றகலவரம் தொடர்பாக இதுவரை 206 பேர் கைதுசெய்யப்பட்டனர்

பொலிசார் 2 இடங்களில் கும்பல்கள் மீது சுட்டதால் ஒருவர் பலியானர்; பலர்காயமுற்றனர்.

ரயில்சேவை முற்றாக ரத்துச் செய்யப்பட்டது. (இ]

# ஏழாலை மாதர் முன்னேற்றச் சங்கம் சாதனை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கிராமசபை சந்தை அண்மையில் மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து சந்தை மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது இதற்கு மாதர் முன்னேற்றச் சங்கத்தலைவி திருமதி டி. ரி ரவரத்தினம் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் அதிதியாகத் கலந்துகொண்ட ஏழாலைக் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு எம். இராசரத்தினம் பேசுகையில், ஏழாலைக் கிராம மாதர் முன்னேற்றச் சங்கம் பல அளப்பரியசேவைகளைச் செய்து வருவதாகவும், இச்சங்கத்தின் முயற்சியினால் இந்தச் சந்தை உருவாகியுள்ளதென்றும் கிராம அபிவிருத்திச் சபை, மாதர் முன்னேற்றச்சங்கம் ஆகியனவை இது போன்ற பல பணிகளைச் செய்வதினால் கிராமம் முன்னேற்றமடையும் என்றும் கூறினர். (ஆ)

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
BARAKA FOR SECRET SERVICE
Next,
ONE CHANCE IN A THOUSAND

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
**எடுப்பார்கைபிள்ளை**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எஸ் எஸ். ஆர்-விஜயகுமாரி
**முத்துமண்டபம்**

**REGAL** (Jaffna)
ROMANIAN FILM FESTIVAL
From 29-1-79 to 3-2-79
Daily at 4-30, 7-00 & 9-30 p m.
29-1-79 **THE IMMORALS**
30-1-79 ROCK'N ROLL WOLF

**மனோகரா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-பத்மினி
**விக்கிரமாதித்தன்**
(புதியபிரதி)

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி ஆர் ... வீரப்பா ... சாவித்திரி
**மகாதேவி** (புதிய பிரதி)
ALSO! SEVEN NIGHTS IN JAPAN - TRAILER

தினசரி 4 காட்சிகள் 2-வது வெற்றிவாரம்
**ராணி** (யாழ். நகர்) எம் ஜி ஆர். - அஞ்சலிதேவி நடித்த
**சக்கரவர்த்தித் திருமகள்**
(புதிய பிரதி)

6-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-00, 7-00, 10-00
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**

3-வது ஜனத்திரள் வாரம்
**ராஜா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
**லலிதா**

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமாரி - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**

# மக்கள் சம்மதமின்றி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் வேறு. ஒரு சில இடங்களில் சத்தியாக்கிரகம் போன்ற சிறு சிறு போராட்டங்களை நடத்துவது நாட்டை மீட்கும் போராட்டமாக அமையாது வடக்கு, கிழக்கில் வந்து குடியேறும் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமுமே போராட்டத்தைத் தான் நிகழ்த்துகின்றன''.

## தீவிரமில்லை என்று கூறுவதா?

நான்: பொதுவாக, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிக்கின்ற தமிழர்கள் தங்கள் நிலைபற்றி திடமாக தீர்மானிக்க முடியாதிருப்பதாக கூறுகிறார்கள். கூட்டணியின் திவிரமற்ற நிலை தான் தங்களின் இந் நிலைக்குக் காரணம் என்றும் அவர்கள் கூறுகிறார்களே...?''

அவர்: ''தீவிரமில்லை என்று இப்போது கூறும் இவர்கள், நாம் அப்படி நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்திலும் எம்மைத்தான் திட்டுவார்கள். ஆனால், 'கொள்கை அடிப்படையில் சிந்திப்பின்; வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிப்பவர்கள் சிந்திப்பதற்கே எதுவும் இல்லை''

''அவர்களின் சொத்துக்களை வடக்கு கிழக்கில் முதலீடு செய்யும் படியும், இப்பகுதிகளுக்கு வரும்படியும் தானே நாம் எப்போதுமே கூறிவருகிறோம்?''..

## இளைஞர் பேரவை

நான்''இளைஞர்பேரவைகூட்டணியிலிருந்து பிரிந்து செல்லுமா?''.

அவர்: இளைஞர்கள் சிலர் தீவிரமாகச் சிந்திப்பதும் செயல்படுவதும் இயற்கையானதே. ஆனால் இளைஞர் பேரவை கூட்டணியிலிருந்து பிரியுமென நான் நினைக்கவில்லை.

நான்: உங்களுக்குரிய சில பாராளுமன்ற ஆசனங்களை இளைஞர்கள் சிலருக்கு வழங்க வேண்டும் என்றும் சிலர் கூறுகிறார்கள்.''

அவர்: ''இளைஞர்கள் என்றால் யார்? யோகேஸ்வரன் போன்றவர்களெல்லாம் இளைஞர்களில்லையா?''

''இதைவிட, இளைஞர்கள் எவரும் எம்மிடம் அப்படிக் கேட்கவில்லை; அவர்கள் கேட்கவும் முடியாது. அப்படியான ஒரு நடவடிக்கையினால் பிரச்னைகள் இன்னமும் அதிகரிக்கவே செய்யுமேதவிர தாக்கமெதனையும் அதனால் ஏற்படுத்த முடியாது''.

## மாநில மாநாடு தீர்மானம்

நான்: ''மாநில மாநாடுகளின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையே?''

அவர்: அவற்றைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவது பற்றியே இப்போது மட்டக்களப்பில் நடைபெற்ற மத்திய குழு கூட்டத்திலும் முடிவுசெய்திருக்கிறோம். விரைவில் அவற்றை நடைமுறைப் படுத்தவே வேண்டும்.

## அரசின் நடவடிக்கை

நான்: ''கடந்த ஒன்றரை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்னைகள் குறித்து இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி உங்களுடைய கருத்து என்ன?''

அவர்: ''சிங்கள வகுப்பு வாதத்துக்கு அரசு முற்று இடமளித்தே செல்கிறது. முன்னர் உறுதியாக நின்றவற்றில் கூட இப்போது விட்டுக் கொடுக்கிறது. அதனால், எமது பிரச்னையை சுலபமாக இந்த அரசு தீர்த்துவிடாது.''

## உறுதியான செயற்பாடு

நான்: அப்படியானால் உங்கள் நிலை?,

அவர்: ''எம்முடைய கோரிக்கையில் உறுதியோடு அதனை நிறைவேற்ற செயல் படுவதேதான்.''

## ராஜ்மோகன் முயற்சி

''கடைசியாக ஒரு விடயம்'' என்று தொடர்ந்தேன்.

''அரசுக்கும் உங்களுக்குமிடையே திரு. ராஜ்மோகனின் தூது ஏதாவது பலனை அளிக்குமா?''

அமிர்: ''அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்''

நான்; ''மாற்றுத் திட்டம் பற்றி அவருடன் பேசினீர்களா?''

அமிர்; அரசாங்கம் மாற்றுத் திட்டமொன்றைச் சமர்ப்பித்தால் அது பற்றி ஆலோசிக்கலாமென்று கூறினேன். மக்களின் சம்மதத்தைப் பெறாமல் அத்தகைய திட்டமெதையும் ஏற்றுக்கொள்ளமுடியாதென்றும் கூறினேன் ஆனால் மக்களின் அபிலாஷைகளை ஓரளவுக்காவது தீர்த்துவைக்கக்கூடிய எந்த ஒரு மாற்றுத் திட்டத்தையுமே அரசு இதுவரை முன்வைக்கவில்லை.''

[உ]

# இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 16-ந் திகதி
திங்கட்கிழமை
(29-1-79)

**மேடம்:-** ஆசைஅலைகளால் அவப் பெயருக்கு இடமுண்டு, வீட்டில் சிறுபிணிக்கு இடமுண்டு, சிறிய விடயத்துக்குக்கூட பெரிய கோபம் தோன்றக்கூடும்.

**இடபம்:-** மருத்துவத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான தினம், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு. பெருமைக்கும் இடமுண்டு.

**மிதுனம்:** செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும், வழக்கு விவகாரங்களில் முடிவு காணப்படும், மகிழ்ச்சியைத் தேடித் தரும் செய்தியும் கிடைக்கும்.

**கடகம்:-** உணவு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவும், நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படும், ஏமாற்றம் ஏற்படும், அமைதி நன்று.

**சிங்கம்:-** நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும், புத்திரசுகத்துடன் சாஸ்திர வழியாலும் நன்மை கிடைக்கும், இறைநம்பிக்கை நன்று.

**கன்னி:-** மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம், தொல்லைகள் அதிகரிக்கும், பிரயாணத்தை தவிர்க்கவும், அடக்கம் வேண்டும்.

**துலாம்:-** பிதாவழிமூலம் நல்ல செய்தி கிடைப்பதற்கு இடமுண்டு. ஸ்தல யாத்திரையும் மேற்கொள்ளப்படலாம், மகிழ்ச்சிகரமான தினம்.

**விருச்சிகம்:-** ஒளிபரப்பும் வாழ்க்கை, உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும், தொழில் துறையில் புதிய உத்வேகம் காணப்படும்.

**தனுசு:-** விருந்துபசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள், பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும், எதிரிகள் மத்தியில் மதிப்புயரும், பொன்னாள்.

**மகரம்:-** உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம், தொழில்துறையில் கவனம் செலுத்தவும்.

**கும்பம்:-** முகமன் பேசிக் கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வரர் கணவன் மனைவி உறவுமுறை பூசல்கள் நிறைந்ததாகவிருக்கும், பொறுமை விரும்பத்தக்கது.

**மீனம்:-** வாழ்க்கை தேனாக இனிக்கும், சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்தும் கிடைக்கும், புதியதுறை மூலம் பொருளைத் தேடுவீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# வெற்றிலைக் கடைக்கு வெளிச்சம் இல்லை

[கொக்குவில்]

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வெற்றிலை பாக்குக் கடைகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இது விஷயமாகச் சபையுடன் பல முறை தொடர்பு கொண்டு தங்கள் குறைகளைத் தெரிவித்தபோது இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று வெற்றிலை பாக்குக் கடைக்காரர்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியின் நடைபாதையில் அமைக்கப்பட்ட மின் விளக்குகள் தைப்பொங்கல் தொடக்கம் தொடர்ந்து இரவுபகலாக எரிந்துகொண்டிருப்பதாகவும் கடைக்காரர்கள் தெரிவித்தனர். [க]

# இன்றைய உதைபந்தாட்டப் போட்டிகள்

[பலாலி]

வயாவிளான் ஞானவைரவர் சன சமூக நிலையம் நடாத்தும் சி. சந்தவனம் வெற்றிக் கேடய 1ம் பிரிவு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய 11 வீரர் ஆட்டத்தில் திருநெல்வேலி- ஒலம்பிக் வி. சழகத்தை எதிர்த்து அளவெட்டி - வளர்மதி வி. கழகம் போட்டியிடும்.

7 வீரர் ஆட்டத்தில் ஊரெழு - ரோயல் வி. கழகத்தை எதிர்த்து தெல்லிப்பளை - திருமகள் வி. கழகம் மோதும். தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் தென்மயிலை - ஞானோதய இளைஞர் வி. கழகத்தை எதிர்த்து உரும்பராய் - மின்னல் வி. கழகம் போட்டியிடும். நிலைய மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டிகள் யாவும் நொக்-அவுட் முறையில் நடாத்தப்படும்.

## போட்டி முடிவுகள்

குப்பிளான் விக்னேஸ்வரா வி. கழகத்திற்கும் ஊறணி புனித அந்தோனியார் இளைஞர் வி. கழகத்திற்குமிடையே நடைபெற்ற 1ம் பிரிவு 11 வீரர் ஆட்டத்தில், விக்னேஸ்வரா வி. கழகம் 2—1 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது. ஆவரங்கால் - சர்வோதய வி. கழகத்திற்கும் கொழும்புத்துறை றெலி வி. கழகத்திற்குமிடையே நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் ஆவரங்கால் சர்வோதய வி கழகம் 2—1 கோல்களால் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. [கோ-நி]

**'ஈழநாடு'**
**20-வது ஆண்டு சிறப்பு மலர்**

இலங்கையின் சரித்திரத்திலேயே தலைநகருக்கு வெளியே தினசரியாக வெளிவந்து கொண்டிருக்கும் ஒரேயொரு பத்திரிகை என்ற சாதனையை நிலைநாட்டியிருப்பது 'ஈழநாடு' ஒன்றேதான்.

11-2-79ல் 'ஈழநாடு' பத்திரிகை தனது 20-வது ஆண்டைப் பூர்த்தி செய்து 21-வது வயதில் காலடி வைக்கிறது.

11-2-79ல் 'ஈழநாடு' அதிக பக்கங்களுடன் வெளிவருமென்பதை வாசக நேயர்களுக்கும் வர்த்தக அன்பர்களுக்கும், விற்பனைப் பிரதிநிதிகளுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி

# "நான் ஏன் வெளியேறினேன்?" கனக மனோகரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடைபெற்ற விசாரணையில், தாம் விளக்கமளித்ததாகவும் தன்னை மன்னிப்பு கேட்குமாறு கோரியதால் வெளியேறி விட்டதாகவும் இளைஞர் பேரவை செயற்குழு உறுப்பினரான திரு. கனக மனோகரன் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. கனகமனோகரன் தமது அறிக்கையில் மேலும் கூறுவதாவது: "கடந்த மாதம் 13ம் திகதி தனக்கு விளக்கம் கோரும் கடிதம்பேரவையினால் அனுப்பப்பட்டிருந்தது அதில் 5 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன'

"திரு. சந்ததியார் சர்வாதிகாரமாக நடக்கிறாரென்றும், த. இ பேரவை தனித்து இயங்குவதற்கு பேரவை யாப்பில் இடமில்லையென்று கூறியதாகவும், திரு. சந்ததியார் பற்றியும், பேரவை பொதுச் சபை கூட்டம் பற்றியும் தலைவர்களிடம் கூறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. 5 குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொள்கிறேன்.

"நான் விளக்கம் அனுப்பவில்லை. ஆனால் கடிதம் கிடைத்ததாக அறிவித்தேன், கடந்த மாதம் 19ம் திகதி நிர்வாகச் செயலாளர் கையெழுத்திடாமல் ஒரு ஞாபக கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பியிருந்தார். அக் கடிதம் எனக்கு 22ம் திகதி கிடைத்தது. அதில் விளக்கமளிக்காவிடில் 23ம் திகதி தற்காலிகமாக நிறுத்தப்படுவீர் என அறிவிக்கப்பட்டிருந்தது. 22ம் திகதி நீதிமன்றம் சென்றுவிட்டு வீட்டிற்கு சென்றபோதே அக்கடிதம் கிடைத்தது. அதனால் விளக்கமளிக்கவாய்ப்பு இல்லை 24ம் திகதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. 28ம் தேதி விசாரணைக்கு வருமாறும் இருந்தது

"விசாரணையில் நேற்று என் சாட்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. 5 குற்றச்சாட்டுகளையும் ஒப்புக்கொண்டேன். மன்னிப்பு கேட்குமாறு கோரியதால் வெளியேறினேன். (க)

## இந்திய அரசு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வைபவத்திலும் நாம் கலந்துகொள்வோம்" என்று சுருக்கமாகவே பதிலளித்தார் திரு. அமீர்.

"உங்கள்கோரிக்கையின்மீது இந்தியா கொள்ளும் அபிமானத்தின் தாற்பரியம் உங்களுக்கு மிகவும் அவசியமானது அதில் நீங்கள் அக்கறையாகவே இருப்பீர்கள். ஆகவே உங்கள் பிரச்னைகளை — அபிலாஷைகளை நேரடியாகவே நீங்களும், மக்களும் அவருக்கு வெளிப்படுத்தும் 'நடவடிக்கைகள்' எதையும் நீங்கள் ஏன் மேற்கொள்ளவில்லை" என நான் கேட்டேன்

அவர் சொன்னார்: "இவற்றை நாம் மேற்கொள்ள அவர் எங்களுடைய பிரதேசம் எதற்கும் வரவில்லை என்பது ஒருபுறமிருந்தாலும், ஆர்ப்பாட்ட - எதிர்ப்பு நடவடிக்கைகள் சிலவேளைகளில் அவருக்கு எதிரானவையாக -இன்னும் சிலவேளைகளில் இந்தியாவுக்கு எதிரானவையாகவும் கூட ஆக்கப்பட்டுவிடமுடியும். இவை அனைத்துக்கும் பதிலாக நான் அவருடன் பேச்சு நடத்தவிருக்கிறேன், அப்போது பிரச்னைகளையும் - நிலைமைகளையும் அவருக்கு தெளிவுபடுத்துவேன்,"

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## கடன்சபைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தனது வாக்குச்சீட்டில் எதுவித அடையாளமுமிடவில்லை வேறுஒருவர் தமது வாக்குச்சீட்டை வெட்டி, பெட்டியில் போட்டிருந்தார்,

வாக்குகள் 'சீல்' வைக்கப்பட்டு, எண்ணிமுடியும்வரை பலத்தபொலிஸ் பந்தோபஸ்து கல்வித்திணைக்களத்தில் பலப்படுத்தப்பட்டிருந்தது, அசம்பாவிதம் ஏதும் நிகழவில்லை, (கெ)

## கனகமனோகரன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றும், இனிமேல் கட்டுப்பாடாக நடப்பதாக உறுதியளிக்குமாறு கோரியபோது அவர் அதற்கு மறுத்துவிட்டார். இதனால் அவர் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள வண்ணை ஆனந்தனுக்கு கடைசிச் சந்தர்ப்பம் அளிப்பதென்றும், பெப்ரவரி 5ம் தேதிக்கு முன் விளக்கமளிக்காவிடில் அவரை பேரவையிலிருந்து வெளியேற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பேரவை பொதுச்சபை முடிவுக்கு மாறாக நடந்துகொண்டதாகவும், அதற்கு மாறாக பத்திரிகையில் அறிக்கை விட்டதாகவும் வண்ணை ஆனந்தன் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. (க)

# வல்வெட்டித்துறையில் இலங்கை வங்கிக் கிளை

## உடுப்பிட்டி எம். பி. கோரிக்கைக்கு நிதி அமைச்சர் அங்கீகாரம்

(நெல்லியடி)

வல்வெட்டித்துறையில் இலங்கை வங்கியின் கிளையொன்று மிக விரைவில் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

நிதியமைச்சர் திரு. ரொனி டி' மெல் இதற்கான அங்கீகாரத்தை வழங்கிவிட்டதாக உடுப்பிட்டி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த இராசலிங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. த இராசலிங்கம் அண்மையில் வடாராட்சிப் பகுதியில் வங்கிக்கிளைகள் டலமூடப்பட்டதனால் பொதுமக்கள் படும் கஷ்டங்களை விளக்கி நிதியமைச்சருக்கு தெரிவித்து, வங்கிக்கிளையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரியிருந்தார். இதனைத் தொடர்ந்தே வல்வெட்டித்துறையில் விரைவில் இலங்கை வங்கியின் கிளை திறக்கப்படவிருக்கிறது.

வல்வெட்டித்துறையில் முன்னர் மக்கள் வங்கியின் கிளை இருந்ததும் பின்னர் மூடப்பட்டதும் வாசகர்கள் தெரிந்ததே,

## தமிழரைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டணியினர் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் இளைஞர் பேரவை முழுஅளவிலான ஆதரவு வழங்கும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தரப்படுத்தல் குறித்து விரிவாக ஆராய்வதற்கு மாணவ இயக்கங்களையும், கல்விமான்களையும் சந்திப்பதற்கு சந்ததியார் தலைமையிலான ஐவர் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இக்குழு நாளைமுதல் தமது பணிகளைத் தொடங்கும்.

நிர்வாக அமைப்பு விதிகளை பரிசீலனை செய்வதற்குக்குழுவொன்றும் தெரிவாகியது, [கெ]

# பாதி மொட்டையுடன் பொலிஸில் ஆஜர்

## திருட்டை மறைக்க முயன்றாராம்

[உருத்திரபுரம்]

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சூட்கேசைத் திருடி அதற்குள் இருந்த ஷேர்ட்டை அணிந்து கொண்டு கள்ளுத் தவறணை ஒன்றில் 'ஸ்டைலாகக்' கள்ளருந்திக் கொண்டிருந்த நபர் ஒருவர் குட்டு வெளிப்பட்ட தனை யடுத்து தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளாதிருக்க மொட்டையடித்துக் கொண்டிருக்கையில் 'அரை மொட்டை'யுடன் பொலிசாரிடம் சிக்கிக் கொண்டார்.

இச்சுவாரஸ்ய சம்பவம் கிளிநொச்சிப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது.

இதுபற்றிய விபரம் வருமாறு!

குளியாப்பிட்டியில் கடமை புரியும் ஜோசப் என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மெயில் வண்டியில் பளைக்குச் சென்ற போது தமது சூட்கேசை திருடரிடம் பறிகொடுத்திருந்தார். இவர் தமது சூட்கேஸ் கிளிநொச்சி அல்லது மாங்குளம் ஆகிய புகையிரத நிலையங்களிற் கிடையிலேயேதான் போயிருக்க வேண்டும் என்ற தகவலையும் அதற்குள் உள்ள பொருட்களின் அடையாளங்களையும் கிளிநொசிச் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்தார்.

சந்தேகநபர் சூட்கேசுக்குள் இருந்த சேட் ஒன்றை அணிந்து கொண்டு கிளிநொச்சியில் உள்ள கள்ளுத்தவறணையில் கள்ளு அருந்திக்கொண்டு இருந்ததாக கிடைத்த தகவலை அடுத்து மறுநாள்காலையில் உதயபுரம் என்ற இடத்தில் அவரது இல்லத்தில் வைத்து கிளிநொச்சிப் பொலிசார் மடக்கிப் பிடித்தனர்.

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களான விக்கிரம ஆராய்ச்சி, ரம்பண்டா ஆகியோரே இந்நபரைத் தந்திரமாக சிவில் உடையில் சென்று மடக்கிப் பிடித்தனர்.

இப்பொலிசார் சந்தேக நபர் இருந்த வீட்டிற்குச் சென்ற சமயம், தனது சகோதரன் மூலம், தன்னை அடையாளம் கண்டுபிடிக்க முடியாத வகையில் தப்பித்துக் கொள்வதற்காக தமது தலைமயிரை மொட்டையடித்துக் கொண்டிருந்தாராம்.

இந்நிலையில் அவரது தலைமயிர் அரைவாசி வெட்டப்பட்ட நிலையில் பொலிசார் பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டி வந்தனர்.

## கிரிக்கெட் டெஸ்ட் மழையால் பாதிப்பு

[புதுடில்லி]

இந்திய-மேற்கிந்திய 5-வது கிரிக்கெட் டெஸ்ட் நான்காம் நாள் ஆட்டம் பலத்த மழை காரணமாக நேற்று பாதிக்கப்பட்டது.

நேற்று ஆட்டம் ஆரம்பமான போது மேற்கிந்திய கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 67 ஓட்டங்களை எடுத்ததும் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. இன்று கடைசி நாள்.


புதியது... இத்தாலியின் உன்னத படைப்பு

வெஸ்பா 1978 மொடல் ஸ்கூட்டர்கள்

PIAGGIO ITALY

vespa 150 sprint v

"வெஸ்பா"வில்
பெருமிதத்துடன்
பயணஞ்செய்யுங்கள்...
இப்போது நீலம், சிவப்பு, வெள்ளை
மற்றும் விரும்பிய வர்ணங்களில்
உங்கள் மனங்கவர்
"வெஸ்பா"
வந்துள்ளது.



★ ஆடர்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

★ உங்கள் தேவைகளுக்கு இன்றே பதிவுசெய்யுங்கள்

சின்னத்துரை அன் கொம்பனி,
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7357.

சி. சின்னத்துரை அன் பிரதர்,
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 284.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 29-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.